மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண்.120/2021

வாக்குமூலம்: வா.சா.1 பவித்ரா

18.01.2024: சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி:- என்னுடைய கூடுதல் முதல் விசாரணையை சத்தியப்பிரமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். முதல் நிரூபண பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விசயங்கள் எல்லாம் என்னால் சொல்லப்பட்டவைதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான்தான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். 06.03.1990ம் தேதியிட்ட வாதியின் பள்ளி மாற்று சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) வா.சா.ஆ.1. 12.03.2016ம் தேதியிட்ட வாதியின் தாயார் தங்கம்மாளின் இறப்புச்சான்று நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) வா.சா.ஆ.2. 07.03.2020ம் தேதியிட்ட வாதியின் தகப்பனார் வீரனின் இறப்புச்சான்று நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) வா.சா.ஆ.3. 08.08.2020ம் தேதியிட்ட வாதியின் தகப்பனார் வீரனின் வாரிசு சான்று நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) வா.சா.ஆ.4. வாதியின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) வா.சா.ஆ.5 ஆகியவை தாக்கல் செய்கிறேன். (வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையான ஆவணங்கள் ஆட்சேபணையின்பேரில் குறியீடு செய்யப்பட்டது) பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை :- வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

Dictated by me in open court and typed by the Typist and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

K KARTHIK
Digitally signed by K KARTHIK
Date: 2024.01.18 13:43:00 +0530

District Munsif,
Palani.